**O.S.No.25/2023**

வா.சா.1, திரு. மாதவன்
நாள் : 13.03.2025 நேரம் : 12.00 P.M.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)நானும், இவ்வழக்கின் 2ம் வாதியான எனது சகோதரர் செந்தில் குமாரும் காக்கூர் கிராமத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். இவ்வழக்கின் 1ம் வாதியான எனது பெரியப்பா முருகேசன் காக்கூர் கிராமத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது தகப்பனார் சீனிவாசன், எனது பெரியப்பாவான 1ம் வாதி மற்றும் 4ம் வாதி சுரேஷ்கண்ணாவின் தகப்பனார் சந்திரன் மற்றும் 1ம் பிரதிவாதி பாஸ்கரன் ஆகியோருடன் 2 பெண்மக்கள் உடன் பிறந்தவர்கள் உள்ளார்கள். எனது அத்தை பெயர் 1.குருவம்மாள், 2.நாகலட்சுமி ஆகும். குருவம்மாளின் மகளை தான் 1ம் பிரதிவாதியான எனது சித்தப்பா பாஸ்கரன் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் கேட்டு கொண்டதன் பேரில் சர்வே எண். 56/1ல் உள்ள சொத்துகள் எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரருக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான்.

2)மேற்படி பாகப்பிரிவினை 30 வருடங்களுக்கு முன்பாக ஏற்பட்டிருக்குமா என்றால் இல்லை, சுமார் 10லிருந்து 15 வருடங்களுக்கு முன்பாக ஏற்பட்டது. மேற்படி பாகப்பிரிவினை நடக்கும் போது நானும், எனது சகோதரனும் மேஜர் என்று சொன்னால் சரிதான். இந்த பாகப்பிரிவினையின் படி எனது தகப்பனாருக்கு சர்வே எண். 56/1D பட்டா எண். 1817ல் விஸ்தீரணம் 3 ஏர்ஸ் எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதேபோல் 1ம் வாதிக்கும் சர்வே எண். 56/1E பட்டா எண். 1818 விஸ்தீரணம் 3 ஏர்ஸ் 1ம் வாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 56/1C பட்டா எண். 1816 விஸ்தீரணம் 3 ஏர்ஸ் 4ம் வாதியின் தகப்பனார் சந்திரனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 56/1B பட்டா எண். 1815

விஸ்தீரணம் 0.6.5 ஏர்ஸ் 1ம் பிரதிவாதி பாஸ்கருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3)பாகப்பிரிவினை நடந்த பிறகு அவரவர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டு தனித்தனியாக பட்டாக்கள் ஏற்பட்டு சொத்துகளை தனித்தனியாக தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் தற்போது நாங்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். அதேபோல் 1ம் வாதியான எனது பெரியப்பாவும் பாகமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் தற்போது வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி 1ம் பிரதிவாதியான எனது சித்தப்பாவிற்கு கிடைத்த பாகத்தில் தெற்கு பகுதியான 3.25 ஏர்ஸ் நிலத்தை மணிகண்டன் என்பவருக்கு கிரையமாக 26.10.2020ம் தேதி ஆவண எண்.1206/2020 மூலம் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான்.

4)மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்தில் நான்கு மாலில் வடக்கு மாலாக எழுதி கொடுக்கும் பாஸ்கரன் கைவசம் உள்ள நஞ்சை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பாகமாக கிடைக்கப் பெற்றதால் தான் மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்தில் நாங்கள் எந்தவிதமான தலையீடும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் மணிகண்டன் என்பவர் பெயரில் பட்டா தற்போது உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி மணிகண்டன் கிரையம் பெற்ற இடத்திற்கு வடக்கு பக்கம் உள்ள மீதமுள்ள இடத்தை 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி ஆவண எண். 810/2023 மூலம் 14.06.2023ம் தேதி கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான்.

5)தற்போது வரை மணிகண்டனும், சிவராணியும் தான் மேற்படி கிரையத்தின் அடிப்படையில் பட்டா பெற்று அனுபவம் செய்கிறார்கள் என்றால் சரியல்ல. மணிகண்டன் கிரையம் பெற்ற இடத்தை மணிகண்டன் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி பெயரில் சர்வே

எண். 56/1B1 பட்டா எண்.1815 ன் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண். 56/1B1 ல் கூட்டாக அனுபவம் செய்து வருவதற்கு எந்தவிதமான ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பாகப்பிரிவினையில் ஏற்றதாழ்வுகள் இருப்பதாக கோரி எந்தவிதமான வழக்கும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை 27.07.2021 ம் தேதி இறந்துவிட்டார்.

6)எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலம் வரை அவரது சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட மேற்படி பாகப்பிரிவினைக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 1 முதல் 4 வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி உடன் தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வருவதாக சொல்வதற்கு எந்தவிதமான ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி அவருக்கு பாகமாக கிடைத்த வழக்கிடை சொத்தை 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு 2ம் பிரதிவாதி தற்போது தனித்த சுவாதீனத்தில் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

7)வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா சொத்தின் மதிப்பு ஹெக்டேருக்கு 4,69,500/- என காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 3.25 ஏர்ஸ்க்கு சொத்தின் மதிப்பு ரூ.1,526/- என்று காட்டப்பட்டுள்ளது தவறு என்றாலும் 15,206/- என்று காட்டப்படவேண்டும் என்று சொன்னாலும் ரூ.15,206 ல் பாதிக்கு தான் நான் நீதிமன்ற கட்டணம் கட்டியிருக்க வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. நான் வழிகாட்டு மதிப்பின் படி நீதிமன்ற கட்டணம் சரியாக செலுத்தாதால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் குறைவாக நீதிமன்ற கட்டணம் கட்டியுள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற வழக்கிடை சொத்தின் மதிப்பு ரூ.1,75,500/- என்று காட்டப்பட்டுள்ளதால் நான் உரிய முறையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தி வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8)எனது அத்தை குருவம்மாள் தற்போது உயிருடன் இல்லை என்று சொன்னால் சரிதான். குருவம்மாள் இறந்த பின்பு தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். குருவம்மாளின் வாரிசுகளை இவ்வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். எதிர்வழக்குரையில் 13.03.2009ம் தேதி முதல் ஏற்கனவே ஏற்பட்ட பாகப்பிரிவினையின் படி 1ம் பிரதிவாதியின் பெயரில் தனித்து பட்டா ஏற்பட்டு அவரவர்கள் இடத்தை அனுபவம் செய்து வருகிறோம் என்பதை நான் பார்த்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் பட்டா ஏற்பட்ட தேதி 13.03.2009 என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

9)27.06.2023ம் தேதி 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளதை மோசடி என்று குறிப்பிட்டுள்ளதற்கு காவல் துறையிலோ, வருவாய் துறையிலே புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி தற்போது மதுரையில் வசித்து வருகிறார் என்று சொன்னாலும், 1ம் பிரதிவாதி மதுரையில் இருப்பதை பயன்படுத்தி கெட்ட முறையில் பாத்தியப்படுவதற்காக பொய்யான வழக்கு மூலங்களை உற்பத்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2009ல் ஏற்பட்ட பட்டாவில் விஸ்தீரணம் 6.5 ஏர்ஸ் ஏற்பட்டுள்ளதை அது சம்மந்தமாக வருவாய் துறையினருக்கு மேல் முறையீடு செய்து பட்டாவை ரத்து செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது, நான் நடவடிக்கை எடுக்கவில்லை.

10)தாவா சொத்து மற்றும் வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் பிரிக்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனது அத்தை குருவம்மாள் மற்றும் நாகலட்சுமிக்கு பாகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு சட்டப்படி கிடைத்துள்ள சொத்தை அபகரிக்க

வேண்டும் என்ற நோக்கத்திற்காக நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.50 P.M

சாட்சியின் கையொப்பம்.